# ஊரளுவில் பூத்தகொடி...

ஊரளுவில் பூத்தகொடி வேரிழந்தது – எங்கள்
ஊரிலுள்ள கண்களெல்லாம் நீரிழந்தது
போரெடுத்து வந்த படை தேரிழந்தது – வீர
பிள்ளையினால் பாரதத்தின் தோலுரிந்தது

– ஊரளுவில் பூத்தகொடி...

தேரசையும் வீதியிலே ஊர் குவிந்தது – எங்கள்
செல்வமே உன் பட்டினியால் ஊர் மெலிந்தது
பாரதத்தின்பேருரைக்க நா எரிந்தது
திலீபன் பாடையிலே ஏறிவர போரெழுந்தது

– ஊரளுவில் பூத்தகொடி...

பன்னிரண்டு நாளிருந்து அவனுருகினான் – நாங்கள்
பார்த்திருக்க மேடையிலே கண் சொருகினான்
விண்ணிழந்து வீழ்ந்ததையா எம் தலையிலே
அந்த வீரனுடல் கையளித்தோம் சுதுமலையிலே

– ஊரளுவில் பூத்தகொடி...

குன்றெனவே நின்றிருந்த கோபுரத்துத் தீபம்
தன் குடலிழந்தும் விடுதலைக்காய் ஆடிநின்ற தேகம்
பன்னெடுத்துப் பாடுகின்றோம் பார்த்திபனே கேளாய் – நீ
பாலருந்தத் தாய்மடியில் மீண்டொருக்காய் வாராய்

– ஊரளுவில் பூத்தகொடி...